CPA
Centre for Policy Alternatives
විකල්ප ප්‍රතිපත්ති කේන්ද්‍රය
மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்

# அரசியலமைப்பு சபைக்கான வழிப்படுத்தற்குழுவின் இடைக்கால அறிக்கை வெளியீடு மீதான மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் அறிக்கை

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையமானது (CPA) அரசியலமைப்பு சபைக்கான வழிப்படுத்தற்குழுவின் இடைக்கால அறிக்கை 21 செப்ரெம்பர் 2017 அன்று வெளியிடப்பட்டமையினை வரவேற்கின்றது. மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையமானது அரசியலமைப்பு சபையின் அடுத்த விவாதங்கள் நடைபெறும் தினங்கள், அரசியலமைப்பின் வரைவுப் பிரேரணையுடனான இறுதி அறிக்கை வெளியிடப்படும் திகதி மற்றும் எப்போது அரசியலமைப்பின் வரைவுப் பிரேரணை கருத்திற் கொள்ளப்பட்டு அனுமதியளிக்கப்படுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது போன்ற விடயங்கள் உள்ளடங்கலாக அரசியலமைப்பு சீர்திருத்த நடவடிக்கைகளுக்கான அடுத்த படிமுறைகள் தொடர்பில் திட்டவட்டமாக உடன்பட்டுக்கொள்ளும்படி அரசாங்கத்தினை கோருகின்றது. மேலும் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையமானது இடைக்கால அறிக்கை அல்லது இறுதி அறிக்கை மற்றும் அரசியலமைப்பின் வரைவுப் பிரேரணை தொடர்பாக மேலதிக மக்கள் கலந்துரையாடலினை மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளதா என்பது தொடர்பாகத் தெளிவு படுத்துமாறும் கோருகின்றது. அரசியலமைப்பு சீர்திருத்தம் தொடர்பாக எஞ்சியிருக்கின்ற படிமுறைகள் தொடர்பான தெளிவான திட்டம் மற்றும் உடன்பாடு என்பன முக்கியமாகும். குறிப்பாக இவ்வருடத்திலே செயன்முறை தொடர்பான போதுமான தெளிவின்மை, போதுமான முன்னுரிமையின்மை மற்றும் போதுமான உடனடித்தன்மையின்மை என்பனவற்றை மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் அவதானித்திருந்ததுடன் தற்போதும் அவற்றை வருத்தத்துடன் சுட்டிக்காட்டுகின்றது. ஆரம்பத்தில் இவ் இடைக்கால அறிக்கையானது 2016 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் வெளியிடப்படும் என உறுதியளிக்கப்பட்டதெனினும் தற்போது ஒரு கணிசமான தாமதத்திற்கு பின்னரே இவ் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. அரசியலமைப்பு சபை உறுப்பினர்கள் கூட செயன்முறை தொடர்பான போதிய தகவல்கள் மற்றும் வழிக்காட்டல்களினை அளிப்பதற்கு இயலாதிருந்தமையினை சில இடங்களில் பார்க்கக்கூடியதாய் இருந்தது.

2015 இல் அளிக்கப்பட்ட வாக்குறுதியினைத் தொடர்ந்து 2016 முழுவதிலும் புரியப்பட்ட அரசியலமைப்பு சீர்திருத்தச் செயன்முறைகளின் பின்னாலிருந்த உத்வேகத்தை தெளிவின்மை, போதியளவான கவனமின்மை மற்றும் வேகமின்மை என்பன மழுங்கடிக்கச் செய்தன. இது சீர்திருத்தத்திற்கு எதிரான குறிப்பிட்ட எண்ணிக்கையான படைகள் குழுக்களாவதற்கும், ஒழுங்கமைக்கப்படுவதற்கும் வழிவகுத்ததோடு சீர்திருத்தத்திற்கு எதிரான விளக்கங்கள் ஆழமாக வேரூன்றுவதற்கும் காரணமாய் அமைந்தது.

வரலாற்றுத் தருணமாகக் கருதப்படக்கூடிய இக்காலப்பகுதியிலே அளிக்கப்பட்ட அரசியலமைப்பு சீர்திருத்தம் தொடர்பான வாக்குறுதியானது வீணடிக்கப்படலாகாது. இலங்கையின் வரலாற்றிலே முன்னர் மேற்கொள்ளப்பட்ட பாரியளவிலான அரசியலமைப்பு சீர்திருத்த முயற்சிகள் யாவும் போதிய தெளிவின்மை, வழிகாட்டுதலின்மை மற்றும் உடனடித்தன்மையின்மை என்பன காரணமாகவே தோல்வியடைந்திருக்கின்றன. இதனைத் தவிர்ப்பதற்கு மற்றும் இச் செயன்முறையினை வெற்றி காணச் செய்வதற்கு காணப்படுகின்ற ஒரே ஒரு வழி அரசியலமைப்பு சீர்திருத்தச் செயன்முறையின் அடுத்த படிமுறைகள் தொடர்பான ஒரு தெளிவான உடன்பாட்டினை போதுமான தகவல்களுடன் மேற்கொள்ளுதலே ஆகும்.